Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

பேசன்: 339 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 8 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 30 ஆம் நாள் றம்ழான் பிறை 9 (13 1-65) புதன்கிழமை இதழ் 335

தேசிய சொத்து

சமுதாயப்பற்றைத் தூண்டி, ஆண்டு தோறும் துணிவுமிக்க வீரஉணர்ச்சியைக் கிளறிவிட்டு, ஒவ்வொரு நாளும் புதிய மறைந்த...மறந்த விஷயங்களைத் தேடித் தேடி மகாள் முன்னால் சமர்ப்பிக்கும்

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

எதிர்காலப் பரம்பரை யினருக்குச் சமூக உணச்சியை ஊட்டி முன்னணிக்குக் கொண்டுவந்து பணியாற்றுகிறது.

லீலா ஸ்டோர்ஸ்,
கொழும்பு - 1

வெங்காயத் தடை ஒருவாரம் நீக்கம்

இன்றிரவு முதல் 21-ந்திகதி வரை ஆனையிறவுக்கப்பால் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து தென் பகுதிக்கு வெங்காயம் கொண்டு செல்வதற்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த ஆனையிறவுத் தடை இன்று நள்ளிரவு முதல் இம்மாதம் 21ந் திகதி நள்ளிரவுவரை நீக்கப்பட்டுள்ளது.

தடையை தற்காலிகமாக நீக்குவது குறித்து யாழ். அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாடு ஒன்றில் இந்த முடிவு செய்யப்பட்டது. இந்த மகாநாட்டில் உதவி உணவு கட்டுப்பாட்டதிகாரி திரு. சிவப்பிரகாசம், விவசாயப் பகுதி உதவிக் கமிஷனர் திரு. சபாரத்தினம், யாழ்ப்பாணம் மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. பொன்னுத்துரை, யாழ்ப்பாணம் கிழக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தனபாலசிங்கம், கச்சேரிப் பகுதிகாரியாதிகாரி திரு. பாலசந்திரன், வடபகுதி உணவு உற்பத்தி விளைபொருள் சங்கக் காரியதரிசி திரு. மகேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவுக்கு அப்பால் அனுமதி பெறாமல் வெங்காயம் கொண்டு செல்வதற்கு இதுவரை தடைவிதிக்கப்பட்டிருந்தது. இத்தடையை நீக்க வேண்டுமென்றும் இல்லையேல் அரசாங்க அறிவித்தல்படி அந்தர் 31 ரூபாயாக வாங்கும்படி விளைபொருள் உற்பத்தி விற்பனவு சங்கங்களுக்கு உத்தரவிடவேண்டுமெனவும் தீவுப் பகுதி விவசாயிகளின் தூதுகோஷ்டியொன்று முன்னாள் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீராவைச் சென்ற சனிக்கிழமை சந்தித்துக் கேட்டுக்கொண்டது. தீவுப்பகுதி விவசாயிகளின் நிலைமையை விளக்கி ஒரு மகஜரையும் தூதுகோஷ்டி சமர்ப்பித்தது. ஒரு வாரகாலத்திற்குள் இது பற்றித் தெரிவிப்பதாக அரசாங்க அதிபர் உறுதியளித்திருந்தார்.

ஆனையிறவுத் தடையை நீக்குவதுபற்றி அரசாங்கம் உடனடியாக ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென "ஈழநாடு" நேற்றுத் தலையங்கம் எழுதியிருந்தது. தீவுப்பகுதி முன்னாள் எம். பி. யின் தலைமையில் நேற்று மீண்டும் அரசாங்க அதிபரிடம் சென்ற தூதுகோஷ்டி 'ஈழநாடு' பத்திரிகையையும் எடுத்துச் சென்று அதன் தலையங்கத்தையும் சுட்டிக் காட்டியது. இதன்பின் இம்மாதம் 21-ம் திகதிவரை ஆனையிறவுத் தடையை நீக்குவதாக அரசாங்க அதிபர் தூதுகோஷ்டிக்குத் தெரிவித்தார். ஆனையிறவுக்கு அப்பால் வெங்காயத்தைக் கொண்டுசெல்லக் கூடாதென்ற தடையை தற்காலிகமாக நீக்குவதுபற்றி அரசாங்க அதிபர் நேற்றுப் பிற்பகல் ஒரு மகாநாடு கூட்டி ஆலோசனை செய்தார்.

21ந் தேதிக்குப் பின் நடவடிக்கை

இன்று 13ந் திகதி நள்ளிரவுடன் ஆனையிறவுக்கு அப்பால் வெங்காயத்தைக் கொண்டுசெல்லக்கூடாதென்ற தடை நீங்குகிறது.

இம்மாதம் 21ந் திகதி நள்ளிரவுக்குப் பின் அனுமதி பெறாமல் ஆனையிறவுக்கு அப்பால் வெங்காயம் கொண்டு செல்பவர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் நிபுணரை இங்கு அழைக்கச் சிபார்சு

நள்ளீர்த் தேக்கத் திட்டம் அரசாங்க அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடிகால்வாய், தண்ணீரைத் தேக்கிவைக்கும் ஆகிய திட்டங்கள்பற்றி இஸ்ரேலைச் சேர்ந்த மூன்று நிபுணர்கள் பல இடங்களைப் பார்வையிட்ட பின், இங்குள்ள நிலைமை இஸ்ரேல் நாட்டிலுள்ளது போன்றிருப்பதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் தெரிவித்தார்கள். இத்திட்டத்தை அமுல் நடத்துமுன் பூரணமான விஞ்ஞான ஆராய்ச்சி ஒன்று நடத்த வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நிபுணர் கோஷ்டியில் டாக்டர் ஆரன் அரட், பேராசிரியர் டான் கோல்ட்பக், யயிர் யலிப் ஆகியோர் இடம்பெற்றனர். இவர்களுடன் புவியியல்

(6-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

சூறாவளியினால் பாதிக்கப்பட்டுத் துன்பமுறும் மக்களுக்கு உதவிசெய்யும்பொருட்டு யாழ்ப்பாணம் கஸதூரியார் வீதி, ஜும்மா பள்ளிவாசல் கட்டிட மேசன் தொழிலாளர் 42 ரூபாய் வழங்கியுள்ளனர். துன்பமுறும் மக்களுக்கு உதவிசெய்ய விரும்புவோர்.

"புயல் கஷ்டநிவாரண நிதி"

"ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்கள் அவ்வப்போது 'ஈழநாடு'பத்திரிகையில் வெளியிடப்படும்.

நேற்று நண்பகல்வரை கிடைத்த வசூல் விபரம்:-

சில்பஸ்ரீ வண்ணார்பண்ணை	1
எஸ் சுப்பிரமணியம் அன்கோ (கொழும்புக்கிளை)	15
க குணபாலன் தம்பாகலட்டி அளவெட்டி	5
ஓர் அன்பர் இணுவில்	5
ஏ கந்தையா தொல்புரம்	10
ஜும்மா பள்ளிவாசல் மேசன் தொழிலாளர்	42
வேரவிலை கிராமமுன்னேற்றச் சங்கம்	5
வேரவிலை சன சமூக நிலையம்	5
திருமதி கே.சண்முகரத்தினம் மணியகாரர் ஒழுங்கை கொக்குவில்	50

(உரும்பராயைச்சேர்ந்த திருமதி ஏ. முத்துவேலு பத்து ரூபாய் அளித்திருந்தார். 5 ரூபா எனத் தவறுதலாகப்பிரசுரிக்கப்பட்டுவிட்டது.)

இலங்கை வங்கி அதிகாரிகள் மூலம் கஷ்டநிவாரணம்

யாழ்ப்பாணம், செவ்

கொழும்பிலுள்ள இலங்கை வங்கியின் தலைமை ஷிராப் திரு. முருகேசன், பல வர்த்தக ஸ்தானங்களின் மூலம் வசூலித்த சுமார் 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள அரிசி, துணி முதலியவற்றை, யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கிக்கிளையின் மனேஜர் திரு. ஏ. பாட்லட் ராஜசிங்கம், சூறாவளியில் தவிக்கும் பல குடும்பத்தாருக்கும் நேரில் சென்று விநியோகித்தார்.

ஆழியாவளை, உடுத்துறை, வத்துராமயன், மருதங்கேணி, சேம்பியன்பற்று, நாகர்கோயில் குடத்தனை, பருத்தித்துறை, பலாலி முதலிய ஊர்களில் சூறாவளியால் இறந்த மீனவர்களின் குடும்பத்தாருக்கும் விநியோகித்து, "ஈழநாடு" சூறாவளி உதவி நிதியின் மூலம் மிச்சமிருந்த [illegible] உருத்திரபுரம், தருமபுரம், முதலிய இடங்களிலே [illegible] அளித்தனர்.

495 அபேட்சகர்கள் போட்டி

கொழும்பு, செவ்

மார்ச்மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் 495 அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். கடந்த பொதுத் தேர்தலில் [ஜூலை 60] 353 அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

சென்ற பொதுத் தேர்தலில் யு. என். பி. சார்பில் 128 அபேட்சகர்களும் சுதந்திரக் கட்சி சார்பில் 98 அபேட்சகர்களும் போட்டியிட்டனர். மற்றக்கட்சிகள் சார்பில் போடடியிட்டவர்கள் விபரம் வருமாறு:

எம். ஈ. பி. - 56, தமிழரசுக் கட்சி- 21, சமசமாஜக்கட்சி- 21, கம்யூனிஸ்ட்- 7, தமிழ்க்காங்கிரஸ்- 10, ஜாதிக விமுக்தி பெரமுனை- 2, எல். பி. பி [தகா கட்சி]-6, சுயேச்சை-45.

ஊர்வலங்களுக்குத் தடை

பொலிஸாருக்கு விசேஷ உத்தரவுகள்

கொழும்பு, செவ்வாய்

இன்று முதல் தேர்தல் நடைபெறும் தினம்வரை சகல ஊர்வலங்களுக்கும் தடை விதிக்குமாறு பொலிஸாருக்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மத, கலாசார ஊர்வலங்களுக்கு இவ்வித தடை இருக்கமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல அரசியல் கட்சிக் கூட்டங்கள் மீதும் விழிப்புடன் இருக்கும்படியும் இக் கூட்டங்களில் நிகழ்த்தப்படும் பேச்சுக்களை குறிப்பாக ஒரு சாராரை அவமதிக்கும்வகையில் கூறப்படுவனவற்றை குறிப்பெடுக்கும்படியும் பொலிசாருக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ஒரு கட்சியின் தலைவரையோ அல்லது அபேட்சகரையோ பற்றி பொய்யானவற்றை வெளியிடும் எந்த ஒருவர் மீதும் நடவடிக்கை எடுக்க பார்லிமெண்ட் தேர்தல் திருத்தச் சட்டம் அரசாங்கத்துக்கு வகை செய்கிறது.

30 தொகுதிகளில் நேரடிப் போட்டி

கொழும்பு, செவ்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மொத்தம் 30 தொகுதிகளின் நேரடிப் போட்டி நடைபெறும். மொத்தமாக உள்ள தொகுதிகள் 145.

நேரடிப்போட்டி இடம்பெறும் தொகுதிகளின் விபரம் வருமாறு-

நீர்கொழும்பு, ஜா எ லை, அவிசாவளை, பாணந்துறை, அகலவத்தை, மாத்தளை, உடுனுவரை, கண்டி, தெல்தெனியா, ஹேவாகெட்ட, அம்ப

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவித்தல்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நாளை (14-1-65) வியாழக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்தக்கு வழமுறையாதலால் வெள்ளிக்கிழமை (15-1-65) மட்டும் 'ஈழநாடு' வெளிவராமாட்டாது.

மனிவாக்கு

மேலை நாடுகளிலிருக்கையில் கடவுள் எங்கோ வானத்தில் இருப்பதாகக் கருதினேன். மேலை நாடுகளுக்கு வந்த பின்தான் அவர் என் உள்ளேயே இருப்பதை அறியலானேன்.

— வணஸி. எவ்.
ஆண்டருஸ்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 29 உ (13-1-65)

இரு "சகாப்தங்கள்"

கொழும்பு தெற்கு தொகுதிக்கான இரு ஸ்தானங்களைத் தவிர மற்ற 149 ஸ்தானங்களுக்கு 492 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றார்கள். மூன்று மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் முடிந்து, புதிய பார்லிமென்ட் சபையும் கூடிவிடும்.

இச்சமயத்தில் காட்டுமக்கள் கூக்குப் பிரதமர் விடுத்துள்ள ஒரு முக்கியமான அறிக்கையில் நாடு சுதந்திரம் பெற்ற 16 ஆண்டுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். 1948 முதல் 1956 வரையுள்ள முதல் எட்டும் ஆண்டுகளை ஒரு சகாப்தமென்றும், 1956 முதல் 1964 வரையுள்ள பின் எட்டு ஆண்டுகளை இரண்டாவது சகாப்தமென்றும் மதித்து, முதல் எட்டு ஆண்டுகளை முதலாளித்துவ ஆட்சியென்றும், பின் எட்டும் சமதர்ம ஆட்சியென்றும் கூறுகின்றார்.

முன் எட்டின் தன்மை எப்படியிருப்பினும், அப்போது நாட்டில் ஓரளவு தேசிய ஒற்றுமையும் அமைதியும் இருந்தது. பின் எட்டிலே பல தொழில்கள் தேசியமயமாக்கப்பட்டு, எல்லா நாடுகளுடனும் அரசியல் உறவு ஏற்பட்டு, சர்வதேச அரங்கில் சிறப்பாகப் பிரதமர் சிறிமாவினால் இலங்கைக்கு அதிக முக்கியத்துவம் கிடைத்தது என்பது உண்மை. ஆனால் மொழி, மதம் என்னும் இரண்டு வெறிக் கோஷங்கள் கிளப்பப்பட்டு, சமூக ஒற்றுமையும், அமைதியும் பெரிதும் பாதிக்கப்பட்டு, நாட்டின் முன்னேற்றமும் தடைப்பட்டதென்பதைப் பிரதமரும் மறுக்கமுடியாது.

சென்ற பார்லிமென்ட் சபை கலைக்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் கூட்டு அரசாங்கம் ஏற்பட்டது. கூட்டு அரசாங்கத்தால் வகுப்புவாத, மதவாதப் பிரச்சினைகள் அடங்கிச் சமதர்ம அடிப்படையிலே நாட்டின் பொருளாதாரம் முன்னேறுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பாராத முறையிலே கூட்டு அரசாங்கத்துக்குத் தோல்வி ஏற்பட்டு, புதிய தேர்தலும் நடைபெறுகின்றது.

இனி வரும் ஐந்து வருடங்களும் எப்படி இருக்கப்போகின்றன? மொழி, மதவெறிகள் அடங்கி மீண்டும் தேசிய ஒற்றுமையும், முன்னேற்றமும் ஏற்படுமா? வேகியில்லாக் கஷ்டம், வாழ்க்கைச் செலவுகள் உயர்வு முதலியவை நீருமா? என்றே பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள். சென்ற இரு "சகாப்த" அனுபவங்களும் இங்கு பல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் நல்ல பாடங்களாக இருக்கவேண்டும்.

இத்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமே பலப் பரீட்சை நடக்க இருக்கின்றது. வகுப்புவாத நஞ்சைக் கிளப்பிய பாவம் இவ்விரு கட்சிகளுக்கும் உண்டு. முன்னர் தேசியக் கட்சிகளாக இருந்த இவ்விரண்டும், மொழி வெறியினைக் கிளப்பின. இதனால் நாட்டில் அமைதியும் நல்லுறவும் குலைந்து முன்னேற்றம் தடைபட்டதென்பதை இவ்விரு கட்சிகளும் உணர்ந்தே இருக்க வேண்டும். தாங்கள் செய்துவிட்டு இப்பெரும் அரசியல் குற்றத்தை அவ்விரண்டும் வாய்விட்டுச் சொல்ல முடியாவிடினும் செய்துவிட்ட அப்பெரும் தவறை திருத்திக் கொள்ள வேண்டிய பெருங் கடமை அவ்விரு முக்கிய கட்சிகளுக்கும் உண்டு.

தமிழரின் ஆதரவும் ஒத்துழைப்புமில்லாமல் ஆட்சியை நடத்தலாமென்ற தவருன எண்ணம் அவ்விரு கட்சிகளுக்கும் இரண்டாவது "சகாப்த" காலத்தில் இருந்தது. அத் தவறை இவ்விரு கட்சிகளும் உணர்ந்து தமிழருக்குச் செய்யப்பட்டுவிட்ட பெரும் அநீதியை நீக்க தக்க முயற்சி களைச் செய்வதில்தான் இனி வருங்கால சுபிட்சமும் அமையும் அடங்கியிருக்குமென்பதை சிறப்பாக மேற்குறித்த இரு கட்சிகளும் ஓரளவாவது உணர்ந்து காரியங்கள் செய்யுமா? இதற்கான பதிலில் தான் இலங்கையின் "புதிய சகாப்தம்" தங்கி இருக்கும்.

பிரிந்தகிடதுசாரிக்கட்சிகளுக்குள் போட்டி

மத்திய தொகுதியில் கெனமன்–'சண்'மோதல்

சமரக்கொடியைஎதிர்த்து சமசமாஜகட்சியும் போட்டியிடுகிறது

சுதந்திரக் கட்சியும் சுதந்திர சோஷலிஸ்ட் கட்சியும் வலம்பரீட்சை

சுதந்திர இலங்கையின் ஆறுவது பார்லிமெண்டுக்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் இவ்வருடம் மார்ச் மாதம் 22ம் திகதி நடைபெறுகிறது. இத்தேர்தலில் யு. என். பி. 116 அபேட்சகர்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 96 அபேட்சகர்களையும் எம். ஈ. பி., ஜே. வி. பி. கூட்டாக 76 அபேட்சகர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்ட் கட்சியும் லங்கா பிரஜாதந்திரக் கட்சியும் கூட்டாக 31 அபேட்சகர்களையும் நிறுத்தியுள்ளன. மற்றும் கட்சிகள் நிறுத்தியுள்ள அபேட்சகர் விபரம் :– லங்கா சமசமாஜக் கட்சி- 23, தமிழரசுக் கட்சி- 20, தமிழ்க் காங்கிரஸ்- 15, கம்யூனிஸ்ட் (கெனமன்) -9, லங்கா சமசமாஜக் கட்சி (புரட்சிக்குழு) 4, கம்யூனிஸ்ட் (சண்)-2, ஈழம் முன்னணி -, 2; சுயேச்சை-69.

பிரிவுக் கட்சிகள் மோதல்

இம்முறை பொதுத் தேர்தலில் இரு பிரிவு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இரு பிரிவு சமசமாஜக் கட்சிகளும் மோதிக்கொள்கின்றன. கொழும்பு மத்திய தொகுதியில் இரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் மோதிக் கொள்கின்றனர். சீன சார்பான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். சண்முகதாசனும் ரஷ்ய சார்பான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமனும் இத்தொகுதியில் போட்டியிடுகின்றனர். இதே தொகுதியில் சமசமாஜக் கட்சிப் புரட்சிக் குழுவின் சார்பில் திரு. பாலாதம்புவும் போட்டியிடுகின்றார். யு என். பி. யின் சார்பில் ஜனப் பலீல் ஏ. கபூரும் திரு. ஆர். பிரேமதாசாவும் போட்டியிடுகின்றனர்.

சி. பி. டி. யுடன் நேரடிப் போட்டி

மிலிப்பேத் தொகுதியில் மூன்று முன் காணி மந்திரியும் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகியவருமான திரு சி. பி. டி. சில்வா தமது புதிய ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்ட் கட்சி அபேட்சகராகப் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு. வில்லியம் பண்டாரா கேட்கிறார்.

சமரக்கொடியை எதிர்த்து...

லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து விலகிய சமசமாஜக் கட்சிப் புரட்சிக்குழுத் தலைவர் திரு. எட்மண்ட் சமரக்கொடிக்கு எதிராக புலத்சிங்களத் தொகுதியில் லங்கா சமசமாஜக் கட்சி ஒரு அபேட்சகரை நிறுத்தியுள்ளது. இதே தொகுதியில் யு என். பி., சுதந்திர சோஷலிஸ்ட் கட்சி, எம். ஈ. பி. ஜே. வி. பி. ஆகியவைகளும் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன. மாஸ்கோவில் இலங்கைத் தூதராகப் பணியாற்றிய திரு டி பி சுபசிங்கா கட்டுகம்பொலத் தொகுதியில் யு என் பி அபேட்சகர் திரு லீலானந்த வீரசிங்காவை எதிர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடுகிறார்.

காங்கிரஸ் அபேட்சகர்

கிளிநொச்சித் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட விருந்த திரு சிவசுந்தரம் கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து விலகி திரு வி குமாரசாமியைக் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடுகிறார்.

(5-ம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கு மாகாண வாக்காளர் விபரம்

கொழும்பு, செல்வாய்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1960-ம் ஆண்டு, 1965-ம் ஆண்டு வாக்காளர் தொகையும், 1960-ம் ஆண்டு மார்ச், ஜூலை தேர்தல்களில் வாக்களித்தவர் தொகையும் கீழேகொடுக்கப்பட்டுள்ளது. 1965-ம் ஆண்டு வாக்காளர் தொகையில் 18 வயதுக்கு மேற்பட்ட வாலிபர்களின் வாக்குகளும் இடம்பெற்றுள்ளன

தொகுதி	1960-ல் மொத்த வாக்காளர்	1960 மார்ச்சில் வாக்களித்தவர் தொகை	1960 ஜூலையில் வாக்களித்தவர் தொகை	1965-ம் ஆண்டு மொத்த வாக்காளர் தொகை
வணர்காவற்துறை	25,616	19,299	14,932	30,785
வட்டுக்கோட்டை	28,955	21,822	18,935	36,935
காங்கேசன்துறை	28 473	20,279	17,808	35,309
உடுவில்	27,278	20,710	18,874	88,280
யாழ்ப்பாணம்	24,299	17,473	18,056	28,473
கல்லூர்	26,966	19,717	18,065	30,864
சோப்பாய்	27,868	21,487	18,058	33,091
உடுப்பிட்டி	28,620	21,420	20,417	34,275
பருத்தித்துறை	19,408	14,231	12,323	22,972
சாவகச்சேரி	25,822	21,485	17,344	30,452
கிளிநொச்சி	13,991	9,079	7,437	18,738
மன்னார்	16936	13,771	13,169	20,420
வவுனியா	18,469	12,515	12,867	24,708
திருகோணமலை	19,024	12,548	13,446	27,643
முதூர் (இரட்டைத் தொகுதி)	28,520	41,127	46,762	38,560
கல்குடா	18,326	16,219	13,025	24,008
மட்டக்களப்பு (இரட்டைத்தொகுதி)	37,764	60,408	57,622	45,087
பட்டிருப்பு	19,473	17,469	16 576	25,855
[illegible]	17,766	14,104	13,405	22,363
[illegible]ந்தாவர்	21,019	16,385	16,548	26,497
பொத்துவில்	18171	14,103	12,549	23,588

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐயாறன் எழுதுகிறது

கிளிநொச்சியிலே ஸ்ரீ மகாதேவ ஆசிரமத்துக்குச் சென்றேன். அங்கு சில அநுமையாள மாமரங்கள் குருவனியால் முறிந்து விழுந்து விட்டனவாம். மற்றபடி ஆசிரமக் கூரைகள் ஆச்சரியமாகத் தப்பி விட்டன. மாமரங்கள் ஏன் இப்படி முறிய வேண்டுமென்று ஸ்ரீ வடிவேல் சுவாமியாரைக் கேட்டதற்கு அவர் எல்லாம் நல்லதுக்குத்தான் என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, தோட்டத்திலே மீண்டும் மும்முரமாக வேலை செய்யச் சென்று விட்டார்.

அங்கிருந்து தர்மபுரத்துக்கு வரும் வழியிலே தேர்தல் உற்சவத்துக்கான கொடியேற்றங்கள் நடந்து கொண்டிருந்தன. பொதுக் கூட்டத்தைப் பற்றி ஒலிபெருக்கிகள் அறிவித்தன. தர்மபுரம் நோக்கி கொடிகளுடன் சில கார்கள் சென்றன. ஏனென்று விசாரித்ததில், மாலை கூட்டத்துக்கு ஆட்களைப் பிடிக்கவே அவை செல்லலாமென்று ஓர் அன்பர் தெரிவித்தார்!

போகும் வழியிலே கிரிஸ் தவக் கோவில், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடங்கள், வீட்டுக் கூரைகள் எல்லாம் குருவனியால் பெரும் சேதமடைந்துள்ளதைக் கண்டோம். சிற்சில இடங்களில் தென்பயிர்கள் தப்பி விட்டன. பெரும்பாலும் மழையின்மையால் பயிர்கள் நாசமடைந்திருந்தன. வடமாகாணத்தின் தென்னஞ்சிய மென்று கூறக்கூடிய இப் பகுதியிலே வயல்களெல்லாம் இப்படி நாசமடைந்திருப்பதைப் பார்க்கையில், இனிசில மாதங்களில் இங்கு உணவுப் பிரச்சினை எவ்வளவோ சமாகுமோ என்று அஞ்சக் கூடியதாக இருக்கிறது.

* * *

தருபுரத்தில் சென்ற 14 வாரங்களாக சுமார் 600 குடும்பத்தாருக்கு (மூவாயிரம் ஆண் பெண் குழந்தைகளுக்கு) பங்கீட்டு அரிசி கொடுக்கப்பட வில்லையாம். தவறு யாருடைய தென்பதுவேறு விஷயம். மழை இல்லாததால் அமைக்களுக்கு கூலி வேலைப்பிழைப்புமில்லையாம். குருவனியால், அவர்களது வீட்டுக் கூரைகள் நாசமடைந்ததுடன், உணவில்லாமல் அவர்கள் பல பல நோய்களுக்கும் உட்பட்டுள்ளதாகவும் கேட்கப் பரிதாபமாக இருந்தது.

திடீரென ஒரு குடிசைக்கு அழைத்துச் சென்றனர். உள்ளிருந்து சுமார் 70 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் இடுப்பில் கௌனம் மட்டும் கட்டிக் கொண்டு, முன்னிக் கொண்டே வெளியில் நகர்ந்து வந்தார். மாதம் 15 ரூபாய் 'பிச்சைக் காசு' கிடைத்து வந்ததாயும் அதைப் பத்தாகக் குறைத்து விட்டதாயும், கூப்பன் அரிசியுமில்லாமல், குருவனியால்விட்டுக் கூரையும் போய் அவதிப் படுவதாயும் தன் சோகக் கதையைக் கூறினர்.

அங்கு சுமார் மூப்பது குடும்பங்கள் கட்டத்துணியின்றி உண்ண உணவுமின்றி வெளியில் வரமுடியாமல் அவதிப் படுகின்றனராம். கல கலத்திலே மதவாச்சி, பொலன்னறுவை முதலிய இடங்களிலே எல்லாம் இழந்து உயிருக்காக ஓடிவந்து, இங்கு தஞ்சம் புகுந்த மக்களே இவர்கள். முதலில் இவர்களுக்குத்தேவை உணவுதான். "கேர்" மாவு ஆளுக்கு இரண்டு குத்தல் வீதம் அனுப்பதாகச் சொன்னார்கள். "கேர்" ஸ்தாபனத்தாருக்கு இது பெரும் புண்ணியமாகும்.

இவ்வாரம் முதல் கூப்பன் அரிசி கொடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டும் அதற்கும் எவ்வளவோ தடைகள். சுவாமி வரம் கொடுத்தும் சில பூசாரிகள் இடங்கொடுக்க விடுவியாம். கூப்பன் அரிசி கொடுத்தாலும் அதை வாங்குவதற்

(6-ம் பக்கம் பார்க்க)

காங்கோவில்

500 க்கு மேற்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் கொலை!

இரகசியமாக நடத்தப்பட்டதாம்

நியூயோர்க், ஜன. 12

ஸ்டான்லிவில்லி நகரை காங்கோ அரசாங்கத் தருப் புக்கள் மீண்டும் கைப்பற்றிய பின் 500-க்கு மேற்பட்ட கிளர் ச்சிக்காரர்களைத் தூக்கிலிட்டி ருப்பதாக "நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகை அறிவித் திருக்கிறது.

விசாரணையின்றியும், பிரப லப்படுத்தாமலும் அவர்கள் கொல்லப்பட்டதாக இப்பத்தி ரிகையின் ஸ்டான்லிவில்லி நிரு பர் கூறியிருக்கிறார்.

இவ்விஷயம் பற்றி அரசா ங்க அதிகாரியும் எதுவும் வெளியிடாமல் உறுதியாக இருக்கிறார்கள் என்றும், சம்ப வம் நடைபெற்றபோது பத்தி ரிகை நிருபர்கள் தடுக்கப்பட் டார்கள் என்றும் அந்த நிரு பர் கூறினார்.

எனினும் சில கொலைகளை நேரில் கண்ட விஷயமறிந்த வட்டாரங்கள் விபரங்களை வெளியிட்டிருக்கின்றன.

பெல்ஜிய பாராதருப்புக் கள் கடந்த நவம்பர் 24-ம் திகதி கைப்பற்றிய பின் சுமார் 800 கலகக்காரர்கள் கொல் லப்பட்டார்கள்.

பெட்ரிக் லுமும்பா திடலில் நடைபெற்ற வழக்கத்துக்கு மாறான வைபவம் ஒன்றில் கொலை செய்யப்பட்டவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சந்தேக நபர்கள் ஒருவர் மீன் ஒருவராகத் திடலுக்குள் கொண்டு வரப்பட்டார்கள். பார்வையாளர்கள் கரகோ ஷம் செய்தால் சந்தேகநபர் விடுதலை செய்யப்படுவார். அவ ரைக் கண்டு பார்வையாளர் கள் கிண்டலும் கேலியும் செய் தால் சந்தேகநபர் கொல்லப் படுவார்.

மரண தண்டனை விதிக்கப் பட்டவர்கள் ஸ்டான்லிவில் கீச்சல் தடாகத்துக்கருகில் உள்ள தனிமையான வீதிக்கு லொறிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டு மெஷின் துப் பாக்கிகளால் சுட்டுக் கொல் லப்பட்டார்கள்.

வீதியோரத்தில் பிரேதங் கள் கிடந்தன. பின் ஐ. நா. சுகாதார அதிகாரி ஒருவரின் உத்தரவுப்படி நான்கு பெரிய குழிகளில் இந்தப் பிரேதங்கள் புதைக்கப்பட்டன.

பிரதமர் ஷோம்பேயின் நெருங்கிய ஆலோசகர்களில் ஒருவரும், தேசிய பாதுகாப்பு பொலிஸ் தலைவருமான விக்டர் கொண்டகா இந்தக்கொலை களை மேற்பார்வையிட்டார். கொல்லப்பட்டவர்களில்பெரும் பாலோர் கிளர்ச்சிக்காரர்கள் அல்லது கிளர்ச்சிக்காரர்களு க்கு ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்டது. டிசம்பர் மத்தி யில் இதுபோன்ற மற்றோர் கொலை நடைபெற்றது.

ரஸ்ஸல் வேண்டுகோள்

லண்டன், ஜன. 12

தென்வியட்நாமில் புத்த த்தை முடிவுக்குக் கொண்டு வர பிரிட்டன் தன் செல்வாக் கைப் பிரயோகிக்க வேண்டும் என்றும், இதற்கான முயற்சி களை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. ரஸ்ஸல் உட்பட பல அறிஞர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் ஆட்சேபனை நிராகரிப்பு

புதுடில்லி, ஜன. 12

மத்திய மந்திரி திரு. சத் தியநாராயண் சின் ஹா வின் தேர்தலை ஆட்சேபித்து, சுதந் திரக்கட்சி அபேட்சகர் செய்து கொண்ட மனு நிராகரிக்கப் பட்டது.

சிங்கப்பூரில் கடற்படை தளபதி

சிங்கப்பூர், ஜன. 12

தூரகிழக்கிலுள்ள பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி சிங்கப் பூருக்கு விஜயம் செய்திருக் கிறார்.

கனேடிய பிரதமர்

வாஷிங்டன், ஜன. 12

கனேடிய பிரதமர் திரு. லெஸ்டர் பியர்சன் வருகிற திங்கட்கிழமை இங்கு ஜனாதி பதி ஜோன்சனைச் சந்திப் பார்.

ஸ்பானிஷ் விமானப்படை

மாட்ரிட், ஜன. 12

5 கோடி டாலர் பெறுமதி யான 70 "சூப்பர்சோனிக்" ஜெட் சண்டை விமானங்களை ஸ்பெயின் அமெரிக்காவிடமிரு ந்து வாங்கியிருக்கிறது. ஸ்பா னிஷ் விமானப்படையின் பழைய விமானங்களுக்குப் பதில் இவை உபயோகிக்கப் படும்.

தென்னபிரிக்கா

கேப்டவுன், ஜன. 12

விசாரணையின்றி 90 நாள் எவரையும் காவலில் வைக்கும் சட்டத்தை தென்னபிரிக்கா தற்காலிகமாக நிறுத்திவைத் திருக்கிறது.

மாணவர் ஆர்ப்பாட்டம்

கராச்சி, ஜன. 12

கராச்சியில் மாணவர்கள் மேற்று மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

கோமிஜின்

மாஸ்கோ, ஜன. 12

ரஷ்யப் பிரதமர் திரு.கோசி ஜின் வசந்த காலத்தின்போது பிரிட்டனுக்கு விஜயம் செய் வார் என இங்கு அறிவிக்கப் பட்டது. பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் பின்பு மாஸ்கோவுக்கு பதில் விஜயம் ஒன்றை மேற் கொள்வார்.

துர்க்காபூருக்கு மாஸ்கோ வரவேற்பு

மாஸ்கோ, ஜன. 12

துர்க்காபூரில் 69-வது காங் கிரஸ் மகாநாடு மேற்கொண்ட முடிவுகளை ரஷ்யப் பத்திரிகை கள் வரவேற்றிருக்கின்றன மண்டலசார்பற்ற கொள்கை யில் உறுதியும் அணுக்குண்டு உற்பத்தியை தவிர்ப்பதும் காங்கிரஸ் தீர்மானங்களில் சில.

அமெரிக்க உதவி அதிகரிப்பு

வாஷிங்டன், ஜன. 12

தென்வியட்நாமுக்கான அமெ ரிக்க உதவியை அதிகரிப்பது பற்றி பேச்சு நடத்த வாஷிங் டன் தீர்மானித்திருக்கிறது. சிவிலியன் அரசாங்கத்திடம் அதிகாரத்தை ஒப்படைக்க ராணுவத் தலைவர்கள் இணங் கியதைத் தொடர்ந்து இப் பேச்சுகள் ஆரம்பமாகவிருக் கின்றன.

ஸ்ரீமதி ராஜகோபாலன் ராஜ்யசபை மெம்பர்

சென்னை, ஜன. 12

தமிழ்நாடு சட்டசபையிலிரு ந்து ஸ்ரீமதி லலிதா ராஜகோ பாலன் ராஜ்யசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு. ராஜகோபாலனின் மர ணத்தைத் தொடர்ந்து இதற் கான இடைத்தேர்தல் நடை பெற்றது.

இந்தியாவுக்கு பாக். அரிசி

ராவல்பிண்டி, ஜன. 12

இந்தியாவுக்கு 50000 டன் அரிசி சப்ளைசெய்யும் ஒப்பந் தத்தில் பாகிஸ்தான் கையெ முத்திட்டது.

இந்தோனேஷியாவுக்கு பாக். கடனுதவி

ஜாகர்த்தா, ஜன. 12

இந்தோனேஷியாவுக்குப் பாகிஸ்தான் 1 கோடி டாலர் கடனளிக்கும் ஒப்பந்தம் ஜாகர்த்தாவில் கைச்சாத்திடப் பட்டது.

"ரஷ்யாவுடன் உறவுவேண்டும்" — அயூப்

ராவல்பிண்டி, ஜன. 12

பாஸபர ஒத்துழைப்பின் பேரில் பாகிஸ்தானுக்கும் ரஷ் யாவுக்குமிடையே நல்லுறவு ஏற்படவேண்டுமென ஜனாதி பதி மிக்கோயன், பிரதமர் கோஸிஜின் ஆகியோருக்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியிருக்கிறார்.

மாபெரும் சிந்தனையாளர்

ராதாகிருஷ்ணனுக்கு போப் பாராட்டு

வத்திக்கான், ஜன. 12

டாக்டர் ராதாகிருஷ்ணன் மாபெரும் சிந்தனையாளரும், எழுத்தாளருமாவார் எனப் போப் பாண்டவர் பால் வெளிநாட்டு ராஜதந்திரிகளி டையே இங்கு கூறினார். தமது இந்திய விஜயம்பற்றிக் குறிப் பிடுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

15 தொழிலாளர் சிக்கினர்

பெல்கிரேட், ஜன. 12

ஒரு வெடி விபத்து காரண மாக பெல்கிரேட் சரகம் ஒன் றில் 15 தொழிலாளர்கள் சிக் கிக்கொண்டிருப்பதாக அறிவிக் கப்பட்டது.

திருச்சியில் துப்பாக்கிச்சாலை

திருச்சிறுப்பள்ளி, ஜன 12

திருச்சியில் 2-வது துப்பாக் கித் தொழிற்சாலைக்கான வேலை கள் ஆரம்பமாகியிருக்கின்றன. தாலியங்கும் துப்பாக்கிகள் இங்கு உற்பத்திசெய்யப்படும்.

பீரீமன்

லண்டன், ஜன. 12

இந்தியாவில் புதிய பிரிட் டிஷ் கமிஷனராக நியமிக் கப்பட்டிருக்கும் "நியூஸ்டேட்ஸ் மன்" பத்திரிகை ஆசிரியர் திரு. ஜோன் பீரீமன் வருகிற மார்ச் மாதம் தமது பொறுப் புக்களை ஏற்றுக் கொள்வார்.

ஜெனரல் மின்

கல்கத்தா, ஜன. 12

தென்வியட்நாம் முன்னாள் அதிபர் ஜெனரல் மின் தனிப் பட்ட முறையில் கல்கத்தா வந்திருக்கிறார். பௌத்த ஸ்தா னங்களுக்கு அவர் யாத்திரை செல்வார்.

கல்கத்தாவில் பிரிட்டிஷ் மந்திரி

கல்கத்தா, ஜன. 12

பிரிட்டிஷ் மந்திரி ஸ்ரீமதி பார்பரா காஸில் நேற்று கல் கத்தா வந்தார். வருகிற வியா ழக்கிழமை அவர் டில்லி திரு வார்.

உலக திரைப்பட தொழிலில் இந்தியாவுக்கு 3 வது ஸ்தானம்

புதுடில்லி, ஜன. 12

வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியிலும்கூட உலகின் பல உற்பத்தி நாடுகளில் இந் தியா தன் 3-வது ஸ்தானத் தைக் காப்பாற்றிவருகிறது.

முலதனத்தைப் பொறுத்த வரை நாட்டின் மத்திய ரக தொழிலில் அது 2ம் ஸ்தா னத்தை வகிக்கிறது.

திரைப்படத் தொழிலில் சம் பளம் அளிப்பதில் உலகில் 4வது ஸ்தானத்தை அது வகிக்கிறது.

ஊழியர்களின் எண்ணிக்கை யைப் பொறுத்தவரை இந்தி யத் திரைப்படத் தொழிலுக்கு 5வது ஸ்தானம் கிடைத்திருக் கிறது.

இந்தியாவில் திரைப்படத் தொழிலில் சுமார் 85 கோடி மூலதனமாக ஒதுக்கப்பட்டி ருக்கிறது. 1 லட்சத்துக்கு மேற்பட்டோர் தங்கள் ஜீவ னோபாயத்தை நடத்துகிறார் கள்.

இந்தியத் திரைப்படங்கள் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்குபற்றியிருக் கின்றன.

சத்யஜித்ராயின் பதர் பாஞ் சலி, அபராஜிதா, அபுசன் ஸார், தோ அன்கள் பாரா ஹாத், ஜல்தேராஹோ, முன்னு, மகாநகர் ஆகிய படங்களும் மற்றும் சிலவும் சர்வதேச பரி சுகளைப் பெற்றன.

ஐ. நா. பகிஷ்காரத்திற்கு இந்தோனேஷிய பார்லிமெண்ட் அங்கீகாரம்

கோலாலம்பூர், ஜன. 12

ஜோகூரில் இந்தோனேஷி யர் புதிதாகக் கரையிறங்கியி ருப்பது பற்றி மலேஷியா ஐ. நா. வுக்கு மீண்டும் புகார் செய்திருக்கிறது.

கரையிறங்கிய 24 பேரில் 13 பேர் கைது செய்யப்பட் டிருப்பதாக அறிவிக்கப்படு கிறது.

இதற்கிடையில் "ஈகிள்" என்ற பிரிட்டிஷ் விமானந் தாங்கிக் கப்பல் சமத்ரா கரைக்கப்பால் வந்து சேர்ந் திருக்கிறது. இப்போது அது சிங்கப்பூரை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

போர்னியோ எல்லையில் இந்தோனேஷியப் படைகள் குவிக்கப்படுவதனால் மூழ் போருக்கான அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்றும், எனவே பிரிட்டன் தமது சாத னங்களுடன் அங்கு சென்றி ருக்கிறதென்றும் சாம்ராஜ்ய மந்திரி திரு. பொட்டம்லி கூறினார்.

இந்தோனேஷியா ஐ. நா. விலிருந்து விலகியதை திரு. பொட்டம்லி கண்டித்தார். ஐ. நா. விலிருந்து விலகும் முடிவை இந்தோனேஷிய பார் லிமெண்ட் அங்கீகரித்ததாக அறிவிக்கப்பட்டது.

மலேஷியாவுக்கு ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் இடம்

ஜப்பான் ஆதரிக்கும்

வாஷிங்டன், ஜன. 12

அல்ஜீயர்ஸில் நடைபெறவிரு க்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட் டில் ஜப்பான் கலந்து கொள் ளும் என இங்கு வந்திருக் கும் அந்நாட்டுப் பிரதமர் திரு. ஸாட்டோ அறிவித்தார்.

மலேஷியா இந்த மகாநாட் டுக்கு அழைக்கப்படவேண்டு மென்ற இந்தியாவின் கோரிக் கைக்கு ஜப்பான் முழு ஆத ரவு அளிக்கும் என டோக்கி யோவில் வெளிவிவகார இலாகா அறிவித்தது.

இந்தோனேஷியாவுள்ள தகராறு காரணமாக மலேஷி யாவின் நியாயமான இடத்தை மறுக்க முடியாது என்றும், ஜப்பானும் இந்தியாவும் இவ் விஷயமாகத் தொடர்பு கொ ண்டிருப்பதாயும் டோக்கியோ வில் அறிவிக்கப்பட்டது.

தி. மு. க. முடிவுக்கு முதன்மந்திரிகண்டனம்

சென்னை, ஜன. 12

ஜனவரி 26 ம் திகதி முதல் ஹிந்தியை உத்தியோக மொழி யாக்குவதென்ற முடிவை ஆட் சேபித்து, அன்றைய தினத்தை துக்கதினமாக அனுஷ்டிப்ப தென்ற தி. மு. க. வின் தீர் மானத்தை முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் கண்டித்தி ருக்கிறார். ஆங்கிலத்தைக்கால வரையறையின்றி டீடிக்பார்லி மெண்ட் தீர்மானித்திருப்ப தால் இம்முடிவு தேவையற் றது என பக்தவத்சலம் கூறி னார்.

தபோவனத்தில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், புதன்

கண்டி திவ்விய ஜீவன சங் கத்தின் ஆதரவில் தென்னக் கும்பர சச்சிதானந்த தபோ வனத்தில் உள்ள பிள்ளையார் கோயிலில் பொங்கல் விழா நடைபெறவிருக்கிறது. சுவாமி சச்சிதானந்தஜி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழா வில் பூஜை, பிரார்த்தனை முத லியன இடம்பெறும்.

ரஷ்ய தலைவர்களுக்குள் போராட்டம்

பெல்கிரேட், ஜன. 12

தற்போதைய சோவியத் தலைவர்கள் குருஷ்சேவைப் போன்ற பிற்போக்குவாதிகள் என்றும், அவர்களுக்குள் இப் போது போராட்டம் நடை பெற்று வருவதாயும் அல் பேனிய கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை கூறியிருக்கிறது.

இந்தப் பத்திரிகை எப் போதும் சீன கம்யூனிஸ்ட் கருத்துக்களைப் பிரதிபலிப்ப தாகும்.

"சோவியத் தலைவர்கள் குருஷ்சேவைவிட தாங்கள் சிறந்தவர்கள் எனக் காட்ட முயன்றபோதிலும், உண்மையில் குருஷ்சேவின் வழியையே பின்பற்றுகிறார் கள்" என அப்பத்திரிகை மேலும் கூறுகிறது.

பூட்டான் மன்னர்-சாஸ்திரி பேச்சு

கல்கத்தா, ஜன. 12

பூட்டான் மன்னரும் இந்தி யப் பிரதமர் சாஸ்திரியும் நேற்று இங்கு 90 நிமிட நேரம் சம்பாஷித்தார்கள். பேச்சுக் கள் இன்றும் தொடர்ந்து நடைபெற்றது. திரு. சாஸ்திரி மன்னரைச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும். 1961 ம் ஆண்டுக்கான பூட்டான் ஐந் தாண்டுத் திட்டத்துக்கு இந் தியா 17 கோடியே 50 லட் சம் ரூபாய் உதவியளித்துவரு கிறது.

52-வது ரஷ்ய ராக்கெட்

மாஸ்கோ, ஜன. 12

சோவியத் ரஷ்யா மற்றோர் புதிய விண்வெளிக் கிரகம் ஒன்றை வான வெளிக்கு அனுப்பியுள்ளது. விஞ்ஞா னப் புள்ளி விபரங்களை அறி யும் பொருட்டு ரஷ்யா அனுப் பிய 52-வது வான்வெளிக் கிரகம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பாராளுமன்ற சரித்திரத்தில் இரட்டை அங்கத்தவர் தொகுதியொன்றில் போட்டியின்றி முழுமையாக இரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும். அத்தப் பெருமை கொழும்பு தெற்குத் தொகுதி வாக்காளர்களுக்குரியது. வாக்களிக்கும் சிரமமில்லாமலே இரண்டுபேரை தெரிவு செய்திருக்கிறார்கள்.

கொழும்பு தெற்குத்தொகுதியின் தற்போதைய மொத்த வாக்காளர் தொகை 57 ஆயிரத்து 408.

பெருமையளிக்கும்கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியில் நடைபெற்ற 1960மார்ச் ஜூலை தேர்தல் முடிவுகளை நினைவு கூருவது நல்லது.

கொழும்பு தெற்கு ஜூலை தேர்தல்

(2 அங்கத்தவர்கள்)

1. ஜே. ஆர். ஜெயவர்தனே. யு. என். பி. 25,814
2. பெர்னாட் சொய்ஸா சமசமாஜ் 23,914

எட்மண்ட் சமரவிக்கிரம யு என் பி 5,673
ஜோர்ஜ் ஜயசூரியா கயேச்சை 3,750
விஜயா குணரத்ன எம் ஈ பி 1,022
என். ஏ. பொன்சேகா கயேச்சை 95

REGAL — JAFFNA
NOW SHOWING
John Gavin, Sandra Dee
in
Romanoff and Juliet
(Eastman Color)

ராஜா சினிமா
(சுழிபுரம்)
எ. ஆர். மகாலிங்கம்-ருக்மணி நடிக்கும்
ஸ்ரீ வள்ளி

மனோகரா (யாழ்ப்பாணம்) போன்: 48 5
6-30க்கும் 9-30க்கும்
பாஞ்சாலி (ஹிந்தி)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

3-30க்கு மட்டும்
NAYOKA and the
TIGER MEN

போட்டியின்றித் தெரிவு பெற்ற ஜே. ஆர்., பெர்னாட் வரலாறு

அதிகப்படி (2-வதிலிருந்து) 1900
அதிகப்படி (3-வதிலிருந்து) 18,239
மொத்த வாக்குகள் 60,370

மார்ச். தேர்தல்

(2 அங்கத்தவர்)

1. எட்மண்ட் சமரவிக்கிரம யு என் பி 25,312
2. பெர்னாட் சொய்ஸா சமசமாஜ் 16,206

ஹேமா தாப்ரே சுதந்திரக்கட்சி 8,851
காமினி பெர்ணாண்டோ எம் ஈ பி 5,412
ஜேம்ஸ் ரத்தினம் சுயேச்சை 1,378
பின் ஹெலன் சுயேச்சை 1,888
எம்.எஸ்.எஸ். ஜெயசேகர எல் பி பி 794
எஸ். ஆர். யாப்பா எஸ் எம் பி 185
எம். வீரபுர எஸ் ஜே எஸ் 178
ஆர். பெர்ணாண்டோ சுயேச்சை 42

அதிகப்படி (2வதிலிருந்து) 9,106
அதிகப்படி (3வதிலிருந்து) 7,355
மொத்த வாக்குகள் 59,774

ஜே. ஆர். ஜயவர்த்தனே

ஐக்கிய தேசியக் கட்சியின் "மூளை" என்று மதிக்கப்படும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனே, 1940ம் ஆண்டில் முதன்முறையாகக் கொழும்பு முனிசிப்பல் சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். பலதடவைகள் பொறுப்பான மந்திரிப் பதவிகளை வகித்த இவர் பாராளுமன்ற நடைமுறைகளிலும், அரசியல் சட்டத்திலும் வல்லுனராக விளங்கிவருகிறார். 1906ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ந் தேதி பிறந்த இவருக்கு 58 வயதாகிறது. இவர் காலஞ்சென்ற நீதிபதி திரு. ஈ. டபிள்யு. ஜயவர்த்தனேவுடைய புதல்வராவர்.

கொழும்புத் திட்ட மூலகர்த்தாக்களில் திரு. ஜே. ஆரும் ஒருவர். 1951ம் ஆண்டில் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் ஜப்பான் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானதிலிருந்து வெளிநாடுகளிலும் இவரது பெயர் அடிபடத் தொடங்கியது.

1943ல் முனிசிப்பல் சபையிலிருந்து விலகி, சேர் பாரன் ஜயத்திலகா இந்தியாவில் இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டதனால் களனித் தொகுதியில் ஏற்பட்ட இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இது இரண்டாவது சட்டசபையின் காலத்தில் ஏற்பட்டது. பெரிய முறையில் வழக்கறிஞர் தொழில் நடத்திப் புகழ்பெற்றிருந்த ஜே. ஆர். அத்தொழிலைவிட்டு முழுநேர அரசியல் வாதியானார்.

சோல்பரி அரசியல் திட்டத்தில் உருவான சுதந்திர இலங்கையின் முதலாவது பார்லிமென்ட் தேர்தலில் களனித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். திரு. டி. எஸ். சேனாநாயக்கா ஸ்தாபித்த முதலாவது மந்திரிசபையில் திரு. ஜே. ஆர். நிதிமந்திரியாகப் பதவியேற்றார். 1952ல் நடைபெற்ற இரண்டாவது பார்லிமென்ட் தேர்தலிலும் வெற்றிபெற்றுத் திரு. டட்லி சேனாநாயக்கா மந்திரிசபையில் மீண்டும் நிதிமந்திரியானார். 1953ல் திரு. டட்லி சேனாநாயக்கா ராஜினாமா செய்து சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராகியபோது திரு. ஜயவர்த்தனே விவசாய மந்திரியாகவும், சபை முதல்வராகவும் நியமிக்கப்பட்டார். 1952ல் லண்டனில் நடைபெற்ற சாமராஜ்யப் பிரதமர்கள் மகாநாட்டில் திரு. டட்லி சேனாநாயக்காவுடன் இவரும் கலந்துகொண்டார்.

அரசியல் வாழ்வில் பெருமளவில் பங்கெடுத்துக் கொண்ட திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனே 1956ல் நடைபெற்ற தேர்தலில் இனபந்துக்கோஷ்டிச் சண்டைக்குள்ளாகி களனித் தொகுதியில் தமது நெருங்கிய உறவினரான திரு. ஆர். ஜி. சேனாநாயக்காவிடம் தோல்வியுற்றார். இதே தேர்தலில் எதிர்பாராதமுறையில் ஐ. தே. கட்சி பெருமளவில் தோல்வியடைந்தது. 1960-ல் நடைபெற்ற தேர்தலில் ஜே. ஆர். அதே தொகுதியில் போட்டியிட்டு இழந்த ஸ்தானத்தை மறுபடியும் பெற்றுக் கொண்டார். தனிப்பெருங் கட்சியாக மாத்திரம் பதவிக்குவந்த திரு. டட்லியின் மூன்றுமாத அரசாங்கத்தின் மந்திரிசபையில் திரு. ஜெயவர்த்தனே நிதிமந்திரியாகவும், விடமைப்பு ஸ்தலவாதாபன மந்திரியாகவும், சபை முதல்வராகவும் நியமனம் பெற்றார். 1960 ஜூலையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இவர் இரட்டை அங்கத்தவர் தொகுதியான கொழும்பு தெற்கில் போட்டியிட்டு முதலாவது அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பெற்றார்.

தற்போதைய பார்லிமென்டிலுள்ள எதிர்க்கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக இருக்கும் இவர் அரசியல் திட்டத்தை அலசி ஆராய்ந்து பார்ப்பதிலும், அரசாங்கத்தை எதிர்ப்பதற்கான தந்திரங்களையும் உபயோகித்து வந்துள்ளார். பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதற்குக் கொண்டுவந்த மசோதாக்களை தோற்கடிக்க இவர் கையாண்ட கடவுடிக்கைகள் பல. இறுதியில் அந்த மசோதாவை சபைக்கு வராமல் தடைசெய்வதற்கான தந்திரங்களெல்லாம் திரு. ஜே. ஆர். மூளையில்தான் உருவானது.

பௌத்த குடும்பத்தைச் சேர்ந்த இவர் களனிவிகாரையின் ஆரம்பகால தர்மகர்த்தாக்களில் ஒருவராவர். திரு. ஜயவர்த்தனேவுக்கு ஒரேயொரு மகன் இருக்கிறார். சதிவழக்கின் ஆரம்பகாலத்தில் சில பிரதிவாதிகளின் சார்பில் ஆஜராகி விவாதித்த திரு. எச். டபிள்யு. ஜெயவர்த்தனே இவரது சகோதரர்.

பெர்னாட் சொய்ஸா

சமசமாஜக் கட்சிக் கொள்கையை விளக்கி, அக்கட்சிக்காக பிரசாரம் செய்வதையே தமது ஒரேயொரு தொழிலைக் கொண்டிருக்கிறார். புதிய பார்லிமென்டுக்குப் போட்டியில்லாமல் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. பெர்னாட் சொய்ஸா சிறந்த பேச்சாளர். ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் இவர் பேசுவதை ஒருமுறை கேட்பவர்கள் இலகுவில் இவரை மறந்துவிடமுடியாது. மணிக்கணக்கில் அழகாகப் பேசக்கூடியவர்.

சென்ற சுமார் 25 வருடகாலமாக கட்சியின் முழுநேர உறுப்பினராக இருந்துவரும் இவர் சொந்த வாழ்க்கையிலும் பார்க்க அரசியலிலேயே பெரிதாக மதிக்கிறார். இதனால் இன்னும் பிரமச்சாரியாகவே இருக்கிறார்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது சமசமாஜக் கட்சி தடைசெய்யப்பட்டது. அந்த நேரத்தில் இதர தலைவர்களுடன் திரு. பெர்னாட் சொய்ஸாவும் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். யுத்தம் முடிந்ததும் பிரிட்டிஷ் இவரை விடுதலை செய்தனர். 1947-ல் கொழும்பு தெற்கு தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

முனிசிபல் சபையுடன் தொடர்பு 1949-ல் இவருக்கு ஏற்பட்டது. அதே வருடத்தில் முனிசிபல் சபைக்கு தெரிவு செய்யப்பட்ட பெர்னாட் இன்று வரையில் அங்கத்தவராக இருந்து வருகிறார். இன்று போட்டியில்லாமல் தெரிவு செய்யப்பட்டிருக்கும் கொழும்பு தெற்குத் தொகுதியை முத

(5-ம் பக்கம் பார்க்க)

2வது வெற்றி மாதம்!

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்

இரவு 6-30, 9-30க்கும்

டி. எம். சௌந்தராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்

3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) மீனாட்சி (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) மோடேர்ன் (பதுளை) ராஜ் (கீர்கொழும்பு)

14-ந் திகதி தொடக்கம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜிகணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்
(சஸமென் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. ச. தேர்தல் முடிவு

கம்பஹா, செவ்வாய்

தோம்பே தேர்தல் தொகுதியைச் சேர்ந்த விக்கி கிராம சபைக்கு நடந்த தேர்தலில் போட்டியிட்ட சுதந்திரக்கட்சி அபேட்சகர்கள் எல்லோரும் தோல்வியடைந்தனர். மொத்தம் 16 வட்டாரங்களில் ஏழு கம்யூனிஸ்ட் அங்கத்தவர்களும் ஏழு சுயேச்சை அங்கத்தவர்களும் 2ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்களும் வெற்றி பெற்றனர். —

திலகர் வைத்தியக் கல்லூரி

பம்பாய், ஜன. 12

திலகர் ஞாபகார்த்த வைத்தியக் கல்லூரி ஒன்றை மகாராஷ்டிர கவர்னர் திரு. செரியன் துவக்கிவைத்தார்.

SCHOOL OF TECHNOLOGY JAFFNA

Course in Draughtsmanship

Includes Building Designs, Quantities, Estimating, and Construction; Geometrical & Mechanical Drawing; Surveying, theory & plan drawing.

Students completing The Course successfully will be presented to:-

(a) The Examination for Authorised Draughtsman to be held by the Surveyor General in May 1966, and / or,

(b) The Examination for Builder's Quantities to be held by the City & Guilds of London Institute in May 1966.

Course commences on 18-1-65. Apply immediately to:-

Director.

"Citadel"
Chundikuli, Jaffna.

பாடசாலைக்குச்
செல்ல
பாட்டா

இலங்கைக் கைப்பணியாளர்கள் உருவாக்கித் தயாரித்தவை

பிரிந்த இடதுசாரிக் கட்சி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டியிடுவதற்குச சம்மதமளித்தார்.

போட்டியிடும் அபேட்சகர் விபரம் வருமாறு:-

கட்டானை

டி விஜயபால மென்டிஸ் (யு என் பி) டாக்டர் ஹெக்டர் பெர்னாண்டோ (ல ச ச), டபிள்யு எஸ பெர்னாண்டோ (எம் ஈ பி-ஜ வி பி).

கேகாலை

பி பி ஜி கலுகல்ல (சிறிலசு) நிமால் கருணாதிலகா (யு என் பி)

கெக்கிராவ

எஸ பி லெனாவ (சிறி ல சு சோ) வி எம் எப் பண்டா (சிறி ல சு) ஆர் டி எஸ ஜயசுந்தரா (சு)

களனி

ஆர் எஸ பெரேரா (சிறி ல சு) ஏ டபிள்யு ஏ அபயகுணசேகரா (யு என் பி) சரணபால குணவர்த்தனா சிறி ல சு சோ)

கெஸ்பாவ

சோமவீரசந்திந்சிறி (சிறி ல சு) டாக்டர் பி எல் எப் செனிவிரத்தினா (யு என் பி) டபிள்யு ஜே பெரேரா (எம் ஈ பி-ஜே வி பி)

கெரியெல்ல

பி பி விஜயசுந்தரா (ல ச ச) ஏ ஈ பி கிரியெல்ல (யு என் பி) எச் ஓ பிரேமரத்தினா (எம் ஈ பி-ஜே வி பி) யு டி குலசிங்கா (சிறி ல சு சோ)

கொலனாவை

ஸி என் மத்தியூ (யு என் பி) எஸ் டி வ்னிகதிலகா எம் ஈ பி-ஜே வி பி) ஏ சிறிசேனா (ல ச ச) ஆர் விதானயக்கா (சு)

கொத்மலை

ஜே டி வீரசேகரா, (சிறி ல சு) டி பி ரணத்துங்கா (யு என் பி) எம் எஸ இகொடவில (சிறி ல சு)

கொட்டாவை

டி பி ஆர் குணவர்த்தனா (எம் ஈ பி-ஜே வி பி) எம் டி எச் ஜயவர்த்தனா (யு என் பி) சந்திரா குணசேகரா (ல ச ச)

கோட்டே

ஸடான்லி திலகரத்தினா (சிறி ல சு) ஜினதாச நியாதபால (யு என் பி) என் டபிள்யு டி' கொஸதா (சு) ஜினதாசா பெரேரா (எம் ஈ பி-ஜே வி பி)

குளியாப்பிட்டி

ஜி டபிள்யு சமரசிங்கா, (சு க) ஜ எம் ஏ இரியகொல (யு என் பி) ஏ டி சோமரத்தினா (எம் ஈ பி-ஜே வி பி)

குண்டசாலை

யு பி வை ஜினதாச (சு க) பி விஜயசிறி (யு என் பி) டி பி வீரக்கூன் (எம் ஈ பி)

குருநாகல்

டி பி வெலகதர (யு என் பி) ஏ ஜயசிங்கா (சு க) பி ஆர் விகரமசூரியா (எம் ஈ பி ஜே வி பி) டி பி மொன்னிகுலாம (சு)

லக்கல

கே எம் கே பண்டா (சு க) பி ஜி முத்துபண்டா (யு என் பி) எல் ஜி புஞ்சிபண்டா (எம் ஈ பி-ஜே வி பி எச் எம் முத்துபண்டா (சிறி ல சு சோ க)

மகாரை

எஸ கே கே சூரியாராய்சி (சு க) டி எஸ குணசேகரா (யு என் பி) எப் ஆர் ஜே பீரிஸ (சு)

மகியங்கன

காப் ஸி பி ஜே செனிவிரத்தினா (யு என் பி) ரத்தினாயக்கா (சு க) கே டி குணரத்தினா (எம் ஈ பி)

மல்கெலியா

எட்மண்ட் விஜயசூரியா (யு என் பி) பி ஜி ஆரியதிலகா (சு க) பி ராஜபக்ஷ (சு)

மாத்தளை

அலிக் அலுவிகாரை (யு என் பி) டபிள்யு பி டொரக்கும்புர (சு க) நிமால் கருணாதிலகா (எம் ஈ பி-ஜே வி பி)

மாத்தறை

மகாநாமசமரவீரா (சிறி ல சோ) பி வை துடாவ (கம்யூ)

மத்துகம

தயாடிபாங்கல் (சு க) டி ஜே சமரவீர (சிறி ல சு சோ) எம் டி ஜே திஸநாயகா (சு)

மாவனல்லை

பி ஆர் ரத்நாயகா (சு க) ஸி ஆர் பெலிகம்மன (யு என் பி) எஸ ஏ சைமன் பெரேரா (எம் ஈ பி-ஜே வி பி)

மாவத்தகம

டி பி விக்கிரசிங்கா (சு க) எச் பி எக்கநாயகா (யு என் பி) வை ஆரியவன்சா சோமரத்தினா (எம் ஈ பி-ஜே வி பி) பி எஸ ரணசிங்கா (சிறி ல சு சோ]

மதவாச்சி

மைத்திரிபால சேனநாயகா [சு க] டி எம் ஆரியதாச [யு என் பி] டபிள்யு எஸ அபயசிங்கா [எம் ஈ பி) எம் டபிள்ரி கே பண்டுல [சிறி ல சு சோ]

மிகிந்தலை

பி எம் கே தென்னக்கூன் [சு க] டபிள்யு ஏ ஆரியதாச [யு என் பி] ஆரியதாசஹெட்டியாராச்சி [எம் ஈ பி-ஜே வி பி]

மினிப்பே

ஏ பி கருணாதிலகா [யு என் பி] எ டி எம நவரத்தினே [சு க] நிஸங்கா கந்தனாராச்சி [எம் ஈ பி] மடுகல்ல [சு]

மினுவாங்கொட

எம் பி டி ஸட் சிறிவர்த்தனா [சு க] எஸ எப் டி சில்வா [யு என் பி] வஜிந்மாரசிங்கா [எம் ஈ பி] டி ஜ கருணாயக்கா [சு] டி டபிள்யு ரத்தினசேகரா [சு) ஜி பியசேகரா [சு சோ க] ஜே ஏ டி எஸ ஜயசிங்கா [சு]

மீரிகம

விஜயபாகு விஜயசிங்கா [யு என் பி] திருமதி சிவகமவெரின ஓபயசேகரா [சு க] எம் பி ரத்தினாயகா [எம் ஈ பி-ஜே வி பி] எம் கே டபிள்யு பொன்சேகரா [சு] கே பி பி கருணாயக்கா [சு)

(6-ம் பக்கம் பார்க்க)

போட்டியின்றி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லில் அடைந்த தோல்வியுடன் கைவிட்டுவிடவில்லை. 1952 லும் அங்கு போட்டியிட்டார். அதிலும் தோல்வியைத்தான் காண முடிந்தது. தோல்விகள் வெற்றியின் அறிகுறியென்பதற்கமைய 1956-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1960-ல் நடைபெற்ற மார்ச், ஜூலை தேர்தல்களிலும் இவர் இத் தொகுதியில் போட்டியிட்டு இரண்டுமுறையும் இரண்டாது அங்கத்தவராக வந்தார்.

தொழிலாளர் நலன்களைக் கவனிக்கும் வேலைகளிலும் இவருக்கு சிரத்தையுண்டு. சமசமாஜக் கட்சியின் கீழுள்ள தொழிற் சங்கங்களை உற்சாகப் படுத்தி அவற்றின் நலன்களை கவனித்துவருகிறார்.

கொழும்பு முனிஸிபல் சபையில் ஆகக் கூடுதலான நேரம் உரைநிகழ்த்திய பெருமை இவருக்குத்தானுண்டு.

—கொழும்பு நிருபர்

வரி விளம்பரம்

தேவை

ஆங்கிலம் தமிழ் கட்டெழுத்தாளர்களுக்கும் Typists) சுருக்கெழுத்தாளர்களுக்கும் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் இடமுண்டு விபரங்கள் விண்ணப்பப்பத்திரங்கள் ரூபாய் 2, யாழ். கல்லூரி, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 1432

மாதம் இருமுறை வெளிவரும் "தமிழ்நேசன்" பத்திரிகைக்கு முற்பணம் கட்டக்கூடிய நம்பிக்கையுள்ள விற்பனையாளர்கள் (Agent) 18-1-65க்கு முன் நிர்வாகி, 'தமிழ்நேசன்', 30 பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 1435

விற்பனைக்கு

காங்கேசன்துறை 8-ம் கட்டையடி (கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு சமீபத்தில்) ரோட்டோரத்தில் மேற்குப்பக்கமாக 5 பரப்பு வடலிக்காணி விற்பனைக்குண்டு விலை கோரவும். விபரங்களுக்கு:- திருமதி உ. காயத்திரி அம்மா, காளி கோயிலடி; தெல்லிப்பழை. 1431

"A40" டெவன் EY சீரிஸ் கார். யாழ்ப்பாணம், மெயின் வீதி, 133-ம் இலக்கத்தில் பார்வையிடலாம். 1428

பொங்கல் வாழ்த்து

பல சைஸ்களில், அழகிய வர்ணப்படங்களடங்கிய பொங்கல் வாழ்த்து விற்பனைக்குண்டு மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தமிழ்ப்பண்ணை, யாழ்ப்பாணம். 1422

கல்வி

எழுது விளைஞர் பரீட்சை (Central Clerical Examination) பங்குனி 1965 வகுப்புகள் தமிலும் ஆங்கிலத்திலும் எல்லாப் பாடங்களும் பயிற்றப்படும். யாழ். கல்லூரி, கிளை, 428, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 1433

நன்றிநவிலல்

காலஞ்சென்ற யாழ். இந்துக்கல்லூரி உதவி ஆசிரியர் திரு. சந்தையா அருணாசலம் அவர்களின் பிரிவு குறித்து நேரில் சமூகம் தந்தும் அனுதாபச் செய்தி, மலர் வளையம் ஆகியவை அகிறவை அனுப்பியும் ஈமக்கிரியையின்போது உதவிபுரிந்தும் எங்கள் துக்கத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இப்படிக்கு, திருமதி அருணாசலமும் பிள்ளைகளும்
29/1, கல்லூரி வீதி, நீராயடி. யாழ்ப்பாணம். 1427

காணவில்லை

9-1-65-ல் யாழ் பஸ் நிலையத்தடியில் ரூபா 345-00 பெறுமதியான பணநோட்டுகள் நழுவி விட்டன. கண்டெடுத்தோர் சு. குமாரசாமி, ஏழாலை மேற்கு, ஏழாலை என்ற விலாசதாரரிடம் ஒப்படைத்தால் தகுந்த பெறுமதி அளிக்கப்படும். 1434

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

புகையிலை—வெங்காயம்—மிளகாய்—கத்தரி—தக்காளி—முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்

METASYSTOX DIPTEREX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத்தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போட்டியிடும் அபேட்சகர்கள்

மொனராமகல
ஆர் வெலிகமா [சு க] கதிருகம [யு என் பி] அல்பர்ட் சில்வா [எம் ஈ பி) பி எம் புஞ்சிபண்டா [சு) வி எச் ஜயசேன [ச]

பசறை
அமரானந்தர த்னுயக்கா (சு க) எஸ ஏ பீரிஸ (யு என் பி)

பெல்மதுல
(டபிள்யு ஏ கருணசேன (சு க) திருமதி சீதா செனிவிரத்தின (யு என் பி) எம் பி ஜோதிபால (எம் ஈ பி) பி எச் கே ஓ ரணசிங்கா (சு சோ க)

பொல்காவலை
சமரக்கொடி (சு க) எம் டி பண்டா (யு என் பி) எச் ஹேரத்பண்டா (சு)

பொலனறுவை
ஏ எச் டி சில்வா (சு சோ க) எச் பண்டா (சு க)

றக்வானை
வி டி ஜி கருணாரத்தின (சு க) எச் குலரத்தின (யு என் பி) டி ஈ மல்லவாராச்சி (ஓம் ஈ பி, ஜே) டி ஆர் மகேவான (சு சோ க) ஆர் எம் புஞ்சி பண்டா (சு)

றம்புக்கணை
அசோகா கருணாரத்தின (சு சோ க) ஏ முத்துநாயக்கா (சு க) ஆர் எம் ஜி ராஜபக்ஸ (சு)

ரத்கம
டி ஈ திலகரத்தின (சு சோ க) எம் பி டி சொய்சா (சு) எம் ஜி மெண்டிஸ (கம்யூ)

இரத்தினபுரி
டபிள்யு எல் பி ஜயவர்த்தன (சு க) டி பி அட்டிகலே (யு என் பி) ஏ விஜயரத்தின (சு சோ க) எஸ முத்தெட்டுகம (சு) எஸ் வீரவர்த்தன (சு)

ருத்தோட்டை
வி முனவீர (சு சோ க) எல பி யகலகம (சு க)

ருவான்வலை
பி வி இம்புலான (யு என் பி) ஏ. செனிவிரத்தின (ல ச க)

செங்கடகல
என் விமலசேன (யு என். பி) பியசேன தென்னக்கூன் [சு க] என் பத்தேவல [எம் ஈ பி]

நாத்தாண்டியா
சேர். அல்பர்ட் பீரிஸ் [யு என் பி] டபிள்யு. புரட்டஸ் திலேரா [சு க] டபிள்யு எஸ் கொஸ்மஸ் (ஸ்ரீ ல சு சோ) டபிள்யு எப் ஸி வீரசூரிய (எல் பி பி)

நாவலப்பிட்டி
ஆர் எஸ் பெல்பொல [ஸ்ரீ ல சு] சந்திரகருணாரத்தின [யு என் பி] ஆர் ஜயதிலகா [ஸ்ரீ ல சு சோ]

நீர்கொழும்பு
குயின்டன் பெர்னாண்டோ [யு என் பி] பெர்னார்ட்குரோரா (ஸ்ரீ ல சு)

நிக்கவரட்டியா
கவிசேன ஹேரத் (யு என் பி) முதியான்சே தென்னக்கூன் [சு] எம் பி வடிகமன்கம [எம் ஈ பி] ஆர் பி தென்னக்கூன் [சு]

நிவித்திகலை
ஸ்டான்லி மொனிகொட [யு என் பி] டி எப் ஹேட்டியாராச்சி [சு க] ஜி டி பலநாயக்கா [சு சோ க] ஈ ஆர் இரத்னே [எம் ஈ பி]

நுவரெலியப
டி வில்லியம் பெர்னாண்டோ [சு க] டொனல்ட் ஜே ரணவீரா [யு என் பி] சிவஞானம் [சு]

பாணந்துறை
லெஸலி குணவர்த்தன [ல ச ச] லேடி சு கந்தாடி பொன்சேகா [என் பி]

மொரட்டுவை
மெரில் பெர்னாண்டோ [ல ச ச புரட்சி), திருமதி குசலா அபயவர்த்தன (ல ச ச), ரஸ்கின் பெர்னாண்டோ [யு என் பி).

முல்கிரிகல
ஜோர்ஜ் ராஜபக்சா [ஸ்ரீ ல சு), தோமத்தினடொன் பிரான்சிஸ்கோ [யு என் பி]

அத்தனகலை
திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா (சு க), ஏ சு ஜி செனிவரத்ன (ஐ தே க), யு எச் டி எஸ விஜயதுங்க (சுயேச்சை).

அகலவத்தை
அனில் குமார் முனசிங்கா (ல ச ச க), ஜி. டி. டேவிட் (ஐ தே க)

அக்மீமன
சேனபால சமரசேகரா (சு க), ஏ ஜி எஸ டி. சில்வா (ஐ தே க), ஏ பி தகநாயக்கா (சுயேச்சை), எட்மண் கலன்சூரியா (ம ஐ மு— ஜா வி பெ), ஈ. டி நாகவத்த (சுயேச்சை).

அக்குரண
(இரட்டை அங்கத்தவர்) ஜி எச் சிறிசேன (சுக), ஸி எஸ ஹமீத் (ஐ தே க), எல் ஜினதாச [ஐ தே க], எஸ ஜி கருணாதிலகா (ம ஐ மு ஜா வி பெ), எச் பி ரத்னநாயக்கா (சுயேச்சை).

அக்குரஸ
டாக்டர் எஸ ஏ விக்கிரமசிங்கா (சு க), கேர்ணல் ஸி ஏ தர்மபாலா (ஐ தே க), எச். டி. கருணதாசா (ம ஐ மு — ஜா வி பெ).

அம்பலாங்கொடை
பி டி எஸ குலரத்ன [சு க], டாக்டர் எம் எச் சத்தசேன [ஐ தே க].

அம்பாறை
எஸ சோமரத்ன [சு க], கே எஸ கத்கசிங்கா [ஐ தே க], எம் எஸ பக்மிவீவ [ம ஐ மு— ஜா வி பெ].

அனுராதபுரம்
கே பி ரத்னபக்கா [சு க], அசோகா மகதில்வீவ [ஐ தே க], டான் பெரேரா [ம ஐ மு— ஜா வி பெ].

அவிசாவலை
பிலிப்குணவர்த்தன [ம ஐ மு — ஜா வி பெ], திருமதி சோமா விக்கிரமநாயக்க [சு க].

பத்தேகம
நீல் டி. அல்விஸ ல ச ச க], ஈ டி விக்கிரமதிலகா ஐ தே க], சிறில் எக்கநாயக்கா [ம ஐ மு — ஜா வி பெ], ஏ சூரியாரச்சி [சுயேச்சை]

பதுளை
பி எச் பண்டாரா [சு க] எச் எம் ஜினதாசா [ஐ தே க], பேர்ஸி விஜக்கூன் [ம ஐ மு — ஜா வி பெ]

பலாங்கொடை
சி எஸ் ரத்வத்தை [சு க], எல். எம் அபுசாலி [ஐ தே க] ரி எச் குணதாசா [சோ ச க], எம் எம் எம் பண்டாரநாயக்கா [சுயேச்சை].

பலப்பிட்டியா
லக்ஷ்மன் டி' சில்வா [சோ சு க], எல் ஸி டி' சில்வா [ல ச ச க], ஜே முனசிங்கா [சுயேச்சை], திருமதி வயிலெட் குணவர்த்தன [சுயேச்சை].

பண்டாரகம
கே டி டி பெரேரா [சு க], வி. டபிள்யு கன்னங்கர [ஐ தே க], ஏ கே பெரேரா [ம ஐ மு — ஜா வி பெ].

பண்டாரவளை
ஜே ஜி குணசேகரா [சு க], சிறில மத்தேயு [ஐ தே க], எம். பியசேன [ம ஐ மு — ஜா வி பெ].

பெலியட்ட
டி ஏ ராஜபக்ச (சு க) டி பி அத்தபத்து (ஐ தே க)

பென்தர-எல்பிட்டியா
அல்பேர்ட் காரியவாசம் (சு க) ஆர் ஜி. சமரநாயக்கா (ஐ தே க) ஜே பி கஜநாயக்கா (ம ஐ மு-ஜா வி எவ்)

பேருவலை
ஐ ஏ காதர் (சு க) பக்கீர் மரைக்கார் (ஐ தே க) அல்லடன் ஜயசிங்கா (ம ஐ மு-ஜா வி பெ) டொன் பீலிக்ஸ கல்ஹேரு (சுயே)

பிபிலை
ரொணி டி' மெல் (சு க) ஆர் எம் தர்மராசா (ஐ தே க)

பிங்கிரியா
எல் பி ஜெயசேன (சு க) ஜே எல் சிறிசேன (ஐ தே க) ஏ ஜம் பொடி அப்புகாமி (ம ஐ மு-ஜா வி பெ)

பொரளை
திருமதி விவியன் குணவர்த்தன (ல ச ச க) எம் எச் முகமது (ஐ தே க) பரஜபால சிறிகுணதாத்தன (ம ஐ மு-ஜா வி பெ)
[மிகுதி நாளை வெளிவரும்]

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குப் பலரிடம்காக கிடையாது!

இதையெல்லாம் கேட்கவும் பார்க்கவும் மனம் சகிக்கவில்லை. இந்த லட்சணத்தில் நாளை தைப்பொங்கல் வருகிறது. அம்மக்கள் இதை எப்படிக் கொண்டாடப் போகிறார்கள்? தெய்வமே!

இதை எழுதிக்கொண்டிருக்கையில் ஒரு நல்ல செய்தி கிடைத்தது. இலங்கை வங்கியைச் சேர்ந்த சில புண்ணியவான்கள் மற்ற இடங்களில் அரிசி முதலியவற்றை விநியோகித்துவிட்டு, பாக்கி சில மூடை அரிசி முதலியன இருப்பதாகவும் அதைக் கொடுக்கலாமென்றும் தெரிவித்தனர். அவர்கள் வாழ்க! திக்கற்றவருக்குத் தெய்வம் எதிர்பாராமல் எப்படியோ துணை செய்யுமென்ற நம்பிக்கை உறுதிப்பட்டது.

* * *

நீராகி நெடுவரைகளானான் கண்டாய் நிழலாகி நீள்விசும்பு மானான் கண்டாய், பாராகிப் பௌவமே மூானன் கண்டாய் பகலாகி வானாகி நின்றான் கண்டாய், ஆரேனும் தன்னடியார்க்கன்பன் கண்டாய் அனுவாகி ஆதியாய் நின்றான் கண்டாய், வாராந்த வனமுலையாள் பாகன் கண்டாய் மழபாடி மன்னும் மணாளன்றானே.

— அப்பா சுவாமிகள்

இஸ்ரேல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ச்சிப்பகுதி உதவி டைரக்டர் திரு. ஜி. எச். எல். சிறிமானேயும் வந்திருந்தார்.

யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது யாழ்ப்பாணப் பகுதி வடிகால், தண்ணீரை தேக்கி வைக்கும் திட்டங்களுக்கு விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி நடத்த அயல்நாட்டு நிபுணர்களை தந்துதவும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது. குளங்களில் எந்த விதத்தில் தண்ணீரை தேக்கி வைப்பது என்பதுபற்றியும், மழைத்தண்ணீரை சேமித்து வைப்பதுபற்றியும், உப்புத் தன்மையுடைய நிலத்தை பயன்தரக்கூடிய விதத்தில் மாற்றுவதுபற்றியும் நிபுணர்களிடம் ஆலோசனை பெற வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்தே இஸ்ரேலைச் சேர்ந்த மூன்று நிபுணர்களும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விஜயம் செய்தார்கள். இவ்விஷயத்தைப் பற்றி இவர்கள் அரசாங்க அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இத்திட்டங்களைப்பற்றி விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி நடத்துவதற்கு இஸ்ரேலைச் சேர்ந்த நிபுணர்களை கொடுத்துதவினால் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்றும் இது யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடிய விஷயமென்றும் விரைவில் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படியும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

தீ விபத்துக்கு 500 வீடுகள் நஷ்டம்

ஜப்பான், ஜன. 12

ஜப்பானில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 500 வீடுகள் அழிந்ததாக அறிவிக்கப்படுகிறது. உயிர்ச்சேதம் எவ்வளவென்பது இன்னும் தெரியவில்லை.

கோஸிஜின்

மாஸ்கோ, ஜன. 12

பிரிட்டனுக்கு விஜயஞ்செய்யவிருக்கும் ரஷ்யப் பிரதம மந்திரி திரு. கோஸிஜின் மேற்கு ஜெர்மன் தலைநகர் பொன் நகருக்கும், வாஷிங்டனுக்கும், விஜயஞ்செய்வாரென அறிவிக்கப்பட்டது.

யுதாண்டுக்கு சுகர்னோ கடிதம்

ஜாகர்த்தா, ஜன. 12

ஐ. நா.விலிருந்து விலகியதற்கான காரணம்பற்றி இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ சொந்த முறையில் யுதாண்டுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

கிராமசபைத் தேர்தல்

இராமநாதபுரம், செவ

கரைச்சி கிராமசபைப் பொதுத் தேர்தல் இம்மாதம் 29ந் தேதி நடைபெறவிருக்கிறது. பத்தொன்பது வட்டாரங்களில் அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சென்ற 1964ம் ஆண்டில் நடைபெறவிருந்த இத்தேர்தல் பின்போடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

'பண்டிதன் வெளியீட்டு விழா'

யாழ்ப்பாணம், புதன்

மல்லாகம் பண்டித மாணவர் கழக ஆண்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. உரையரங்கு, கவியரங்கு முதலியனவும் விழவில் இடம் பெறும்.

காலையில் மல்லாகம் இலக்கிய கலா மன்றத்தினரின் 'பண்டிதன்' சிறப்பிதழ் வெளியீட்டுவிழா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பேராசிரியர் அ. வி. மயில்வாகனம் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

சைவசமயப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கூட்டுப்பிரார்த்தனைச்சபை நடத்திய சைவ சமய அறிவுப்போட்டித் தேர்வு முடிவுகள் வருமாறு:-

திருமுறை மனனப் போட்டி ஆரம்ப பிரிவு:- கு. வசந்தி, ஆ. பாலசுப்பிரமணியம், கு. குகனேஸ்வரி.

மத்திய பிரிவு:- பா. அருணாணந்தேவி, பா. புஷ்பராணி, ம. செல்வராசா.

சித்தி பெற்றோர்:- அ. நீலாட்சி, தி. மீனாட்சி.

சைவசமயக் கட்டுரைப் போட்டி ஆரம்ப பிரிவு: ம செல்வராசா, பா. அருணாணந்தேவி, சீ. லலிதா பாரதி.

கீழ்ப்பிரிவு: ச. இராஜேந்திரநாதன், இ. மயூரநாதன், ச. செல்வேந்திரன்.

மத்திய பிரிவு: மெ. பிரபாகரன், பொ. மாலினிதேவி.

மேற்பிரிவு 1: ம. கணேசலிங்கம், ச. தெய்வேந்திரன், ச. கிருஷ்ணமூர்த்தி.

மேற்பிரிவு 2: சீ. சாவித்திரி.

கொழும்பு, செவ்.

இரத்மலானையில் ரூ. 3 கோடி 50 லட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கும் வீடமைப்புத்திட்ட வேலைகளை இன்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா ஆரம்பித்தார்.

இராணுவத்தினர் தாக்கினராம்

மாவிட்டபுரம், செவ்.

யாழ்ப்பாணம் பஸ நிலையத்துக்கருகிலுள்ள பொது மலசலகூடத்துக்குச் சென்ற இளைஞன் ஒருவரைசில இராணுவ வீரர்கள் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

கந்தையா கிருஷ்ணமூர்த்தி (16 வயது) என்ற இந்த இளைஞனை சிகரெட் வாங்கித் தரும்படி இராணுவ வீரர்கள் கேட்டனர் என்றும் அதற்கு மறுத்த அந்த இளைஞரை அவர்கள் தாக்கி, கிளிநொச்சிவரை 'ஜீப்'பில் கூட்டிச் சென்று மேலும் தாக்கினர் என்றும் இந்த இளைஞரை கிளிநொச்சியில் இராணுவத்தினருக்குத் தெரியாமல் தப்பியோடி பூனகரிக்குச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதுசம்பந்தமான புகார் ஒன்றை இந்த இளைஞன் யாழ்ப்பாணம்பொலிஸில் பதிவு செய்துள்ளார்.

குறிப்பிட்ட இளைஞர் யாழ்ப்பாணம் கபே யொன்றில்வேலை செய்பவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், புதன்

வண்ணார்பண்ணை மத்திய பகுதி மக்களுக்கு பயன்படக் கூடியதாக ஐக்கிய பண்டகசாலை ஒன்றை அமைப்பதென பொதுமக்கள் கொண்ட மகாசபை தீர்மானித்ததைத் தொடர்ந்து, அதன் அவசியத்தை வலியுறுத்தும்பொருட்டுஎதிர்வரும் வெள்ளிக்கிழமைமாதுகோஷ்டி ஒன்று யாழ்ப்பாணம் கூட்டுறவு ஆணையாளரைப் பேட்டி காணவிருக்கிறது.

தேர் உற்சவம்

சுழிபுரம், புதன்

இன்று ஏகாதேசியை முன்னிட்டு பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் தேர் உற்சவம் நடைபெறும். நாளை காலை சமுத்திர தீர்த்தம் திருவடி நிலையில் நடைபெறும்.

நினைவுதினம்

யாழ்ப்பாணம், புதன்

சிறந்த வைத்தியராயும் கொடை வள்ளலாயும் ஏழைகள் நண்பனாகவும் பணிசெய்வதே தமது வாழ்க்கையின் குறிக்கோளாய் 90 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து மறைந்த 'யாழ்ப்பாணத்தாத்தா' டாக்டர்சுப்பிரமணியம் (பி.எஸ்) நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

30 தொகுதிகளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாங்கொடை, காலி, வெலிகம, கம்புறுபிட்டியா, மாத்தறை, பெலியத்தை, முன்கிரிகலை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, நிந்தவூர் புத்தளம் கட்டுகம்பளை ஹொறவப்பொத்தானை மின்னேரியா பிபிலை பசறை வெலிமடை கேகாலை ருவான்வலை,டெடிமக

கொழும்பு மத்தியில் 10 பேர் போட்டி

கொழும்பு, செவ்

நடைபெறவிருக்கும்பொதுத் தேர்தலில் 60 தொகுதிகளில் ஒவ்வொரு தொகுதியிலும் மூவர் போட்டியிடுவர். 34 தொகுதிகளில் நால்வர் விதமும் 10 தொகுதிகளில் ஐவர் விதமும் 4 தொகுதிகளில் 6 பேர் விதமும் 5 தொகுதிகளில் 7 பேர் விதமும் போட்டியிடுவார்கள்.

ஒரே ஒரு தொகுதியில் மட்டும் (கொழும்பு மத்தி) 10 பேர் போட்டியிடுகின்றனர்.

தேவை

எமது கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு வான் சேல்ஸ்மென், கஷியர், தொழில் மேற்பார்வையாளர் உடனே தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

பாக்கிங் செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.

யாழ்ப்பாணம் ஸ்ரோஸ், 65, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
1438

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org